# டீகோ வாடிக்கையாளர் சேவை நிலையங்கள் விஸ்தரிப்பு

வாடிக்கையாளர்களின் நலன் மற்றும் வசதி கருதியும் அவர்களுக்கு மிகச் சிறந்த சேவையை வழங்குவதற்காகவும் டீகோ நிறுவனமானது, தெரிவுசெய்யப்பட்ட நகரங்களிலுள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு




நிலையங்களிலும், லா·ப்ஸ் சிறப்புச் சந்தைகளிலும் வாடிக்கையாளர் சேவையை வழங்குகிறது. வாடிக்கையாளர்கள் இலகுவாக டீகோ சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் அதிகமாக செல்லும் இரண்டு அமைவிடங்கள் இதற்கென தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இது குறித்து டீகோ நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி துமிந்த ரத்நாயக்க கருத்து தெரிவிக்கையில்;

.வாடிக்கையாளர்களுக்கு சிறந்த,வசதியான சேவைகளை வழங்குவதற்கு நாம் எப்போதும் முயற்சி செய்துவருகிறோம். அவர்கள் அன்றாட நடைமுறைகளுக்கு ஏற்ற வகையிலும் எமது சேவைகளை சிரம மின்றி பெற்றுக்கொள்ளும் வகையிலும் இச்சேவை அமைந்துள்ளது. வாகன நெரிசல் மிக்கதான நேரங்களில் ஓரிடத்திலிருந்து மற்றுமொரு இடத்துக்கு செல்வதில் பல சிரமங்கள் உண்டு. அத்துடன் நேரத்தை மீதப்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது. அதனை கருத்திற்கொண்டு இச்சேவையை வழங்குவதில் நாம் மகிழ்வடைகிறோம் எனத் தெரிவித்தார்.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 'shop in shop' சேவை, இணையத்தளத்தினூடாக வாடிக்கையாளர் வசதிகளை வழங்குகிறது.

பட்டியல் கொடுப்பனவுகளை செலுத்துதல், முற்கொடுப்பனவு, பிற்கொடுப்பனவு சிம்காட் விற்பனை, scratch அட்டை, ரீலோட், Handsets மற்றும் ஏனைய சேவைகளையும் பெறலாம்.

மேற்குறிப்பிட்ட வாடிக்கையாளர் சேவை நிலையங்களில் இவற்றுக்கு மேலதிகமாக பின்வரும் சேவைகளையும் டீகோ வழங்குகிறது.

இலக்கத்தை மாற்றுதல்,

IMI மாற்றுதல்,தொலைபேசி மற்றும் சிம்காட் இயக்கத்தை நிறுத்துதல், Scratch அட்டை மற்றும் உ ணீடின பிரச்சினைகளைத் தீர்த்தல், மாற்று சிம்காட் விநியோகம் - காணாமல்போனவை / பழுதானவை, தொலைபேசிக்கான அடையாள அட்டை விண்ணப்பங்கள், இடம்பெயர்ந்தலுக்கான சிம்காட் விநியோகம்.

இந்த அனைத்து சேவைகளையும் கொஹூவளை, மொரட்டுவை, மஹரகமை ஆகிய நகரங்களின் லா·ப்ஸ் சன் அப் சிறப்புச் சந்தைகளிலும் தெமட்டகொடை, ஹெவ்லொக் வீதி, பம்பலபிட்டிய ஆகிய இடங்களின் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் பெறலாம். இத்திட்டத்தின் ஆரம்பமாக மேற்குறிப்பிட்ட இடங்களில் சேவை வழங்கப்படுவதுடன் எதிர்காலத்தில் ஏனைய பல அமைவிடங்களிலும் சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச்சேவைக்கு மேலதிகமாக மேற்குறிப்பிட்ட அமைவிடங்களில் வாடிக்கையாளர்களுக்கு நலனளிக்கும் தரமான பல்வேறு செயற்திட்டங்களையும் முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்துவருகிறோம் என துமிந்த ரத்நாயக்க தெரிவித்தார்.

சகல முற்கொடுப்பனவு, பிற்கொடுப்பனவு பாவனையாளர்களுக்கும் கடந்த ஜூன் 5ஆம் திகதி இத்திட்டம் அறிமுகப்படுத்திவைக்கப்பட்டது. 'shop in shop' இற்கு வரும் ஒவ்வொரு வாடிக்கையாளரும் வெற்றியாளராகும் வாய்ப்பு பெரும்பாலும் உண்டு.

இந்த இரு அமைவிடங்களுக்கு அருகில் உள்ள வாடிக்கையாளர்களுக்கும் ஏனைய வாடிக்கையாளர்களுக்கும் இன்முகத்துடன் சேவை வழங்க நாம் காத்திருக்கிறோம். 'shop in shop' களில் டீகோ பிற்கொடுப்பனவு இணைப்பு ஒன்றை வாங்கினால் கையடக்கத் தொலைபேசி ஒன்றை வெல்வதற்கான வாய்ப்பு உள்ளது. ஒவ்வொரு புதிய முற்கொடுப்பனவு இணைப்புக்கும் 100 ரூபா பெறுமதியான பேசும் காலம் ஜூன் மாதம் இலவசமாக வழங்கப்படுவதுடன், 100 ரூபாவுக்கு அதிகமாக பேசும் பட்சத்தில் அடுத்து வரும் 6 மாதங்களுக்கும் (ஒவ்வொரு மாத இறுதியிலும்) இந்தச் சலுகை கிடைக்கும். ஜூன் மாதத்தில் ரீலோட் செய்பவர்களில் தெரிவு செய்யப்படும் அதிர்ஷ்டசாலிக்கு காகில்ஸ் எக்ஸ்பிரஸ் இல் கொள்வனவு செய்யப்பட்ட 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை இலவசமாக பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு உள்ளது. அவ்வாறில்லாவிடின் வாடிக்கையாளரின் வாகனத்துக்கு முழு அளவுக்குமான எரிபொருள் நிரப்பித்தரப்படும்.



வாடிக்கையாளர் ஒருவர் தனது கட்டணப் பட்டியலை செலுத்தும் சந்தர்ப்பத்தில் அவர் செலுத்திய பணத்தை மீளப்பெறும் அதிர்ஷ்டம் உள்ளது. அது தவிர பரிசுச் சீட்டிழுப்புக் காலப் பகுதியில் இந்தச் சேவை நிலையங்களுக்கு செல்லும் வாடிக்கையாளர்கள் அனைவரும் சீட்டிழுப்புப் பெட்டியில் தங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்கள் அடங்கிய சீட்டை இட்டு கவர்ச்சிகரமான பரிசில்களை வெல்லலாம். இது எமது 'shop in shop' இனது ஆரம்பம் மட்டும்தான். இனிவரும் காலங்களில் வாடிக்கையாளர்களுக்கு இலகுசேவைகளை வழங்கக்கூடிய அனைத்து இடங்களிலும் சேவை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துவருகிறோம். எமது வாடிக்கையாளர்களே எமது சொத்து. ஆகையால் அவர்களுக்கு தரமான சேவைகளை பலவற்றை விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளோம் என துமிந்த ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.